# பொதுக்காலம் 25ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இதயத்தில் நேர்மையையும் நம்பிக்கையையும் கொண்டு நல்ல கண்காணிப்பாளராக வாழ இன்றைய பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு நம்மை அழைக்கின்றது.

அகிலத்தைப் படைத்து அனைத்தையும் ஆளுங்கள், மகிழ்ந்திருங்கள் என்றார் இறைவன். இறைவன் தந்த பொறுப்பு அதை இனிதே நிறைவேற்றும் கடமை நமக்குள் நன்றாக இருக்கும் போதுதான் நாம் கண்காணிப்பாளராக முடியும். இறைவன் தந்த இயற்கையை வதைக்காது இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், நாட்டில் நிலவும் அநீதி, உண்மையின்மை, வஞ்சகத்தன்மை ஆகியவைப் பற்றி எண்ணி உள்ளம் குமுறுகிறார் ஆமோஸ் இறைவாக்கினர். அன்று மட்டுமல்ல இன்றும் தான். உள்ளவனுக்கு ஒரு நீதி, இல்லாதவனுக்கு ஒரு நீதி என்று நீதிமன்றம் நீதியை விற்றுக் கொண்டிருக்கின்றது. நாம் நாம் இறைமக்களாக செய்ய வேண்டியது என்ன? அநீதிக்கு எதிராக குரல் கொடுப்போம். ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக தோள் கொடுப்போம்.

இன்றைய நற்செய்தியில், முன்மதியோடு செயல்பட்ட வீட்டு பொறுப்பாளரை நமக்கு உவமை மூலம் கூறுகிறார் இயேசுகிறிஸ்து. நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதை பாராட்டுவதற்காக அல்ல, மாறாக அழிந்து போகக்கூடிய செல்வத்தை சரியாகப் பயன்படுத்தி, கடனபட்டவர்களின் அன்பையும் ஆதரவையும் தேடிக்கொண்டதற்காக.

செல்வம் எங்கும் ஆட்சி செலுத்தும் ஒரு பொருள். சிறியவற்றில் நம்பிக்கையாய் செயல்படும்போதுதான் பெரிய அளவு நம்மில் ஒப்படைக்கப்படும். இன்றைய சமூகத்தில் செல்வம், பணம் என கோடிகளில் புரளும் கேடிகள் கூட்டம் ஒருபுறமிருக்க பசியில் வாடும் மக்களும் பாலுக்கு அழும் பச்சிளம் குழந்தைகளும் மறுபுறம் என்பதுதான் உண்மை நிலை. இந்நிலை நீக்கப்படவேண்டும். இதற்கு நாம் நம்முடைய பங்களிப்பைத் தர வேண்டும். இந்த சிந்தனைகளை மனதில் கொண்டு இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நல்ல கண்காணிப்பாளராக வாழ அழைப்பவரே எம் இறைவா!

எம் திருஅவையை வழிநடத்தும் எம் திருஅவைத் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் நேர்மையோடும் இறை உண்மையோடும் எளிய வாழ்க்கை வாழ்ந்து மக்களை இறைவழிநடத்தும் நேர்மையான கண்காணிப்பாளராகத் திகழும் வரமருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

2. நேர்மையையும் நீதியையும் விரும்புகின்ற எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் நேர்மையோடு ஆட்சி செய்யவும் தொழில்நுட்பம் என்கின்ற போர்வையில் எளிய மக்களை வாட்டி வதைக்காமல், பொருளாதார சிக்கலில் விழிபிதுங்கி நிற்கும் எம் நாட்டில் நிதிநிலை சீராகவும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த சிறந்த ஞானத்தையும் தர வரமருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

3. அழியாத செல்வத்தை தேடிக் கொள்ள அழைப்பவரே எம் இறைவா!

நாங்கள் எங்களது வாழ்விற்குத் தேவையான செல்வத்தை நேரிய வழியில் பெறவும், சேர்த்த செல்வத்தை முறையாகச் செலவிட்டு, தேவையிலுள்ளவர்களுக்கு உதவவும், பொறுப்பான உள்ளத்தைத் தர வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

4. விண்ணக கதவுகளைத் திறந்து எம்மை ஆசீர்வதிப்பவரே எம் இறைவா!

வற்றிப்போய் இருக்கின்ற நீர்நிலைகளும் பயனற்று கிடக்கின்ற வயல்வெளிகளும் வளம் பெற தேவையான மழையைத் தரவும், குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைவாக கிடைக்கப் பெறவும், தொழில் வளர்ச்சி அடைந்து பொருளாதாரம் சிறக்கவும், வேலைவாய்ப்பு பெற்று மனித ஆற்றல் பயன்படுத்தப்படவும், திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று நிறைவோடு வாழ வரமருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com